இன்றைய செய்தி நாளைய வரலாறு



# முரசொலி


Murasoli

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 273 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – சித்திரை 31 – ஞாயிற்றுக்கிழமை 14 மே 2023 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 273: Thiruvalluvar Year - 2054 - Chithirai 31 - Sunday 14 May 2023 - Kovai ★★ 8 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.5.2023) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் 561 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவிலான 14 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 201 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 9 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் கிர்லோஷ் குமார், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் வி.தட்சிணாமூர்த்தி, பேரூராட்சிகளின் இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிர்வாகத்துறை இயக்குநர் பா.பொன்னையா, ஆவடி மாநகராட்சி ஆணையர் க.தர்பகராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.5.2023) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 35 கோடியே 79 இலட்சம் ரூபாய் செலவில் பள்ளிகள் புதுப்பிக்கும் பணிகள், 19 புதிய பூங்காக்கள் அமைக்கும் பணிகள், ஒரு பூங்கா மறுசீரமைக்கும் பணி, 5 புதிய விளையாட்டு திடல்கள் அமைக்கும் பணிகள், 5 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டும் பணிகள் ஆகிய முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகரற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் கிர்லோஷ்குமார், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் வி.தட்சிணாமூர்த்தி, நகராட்சி நிர்வாகத் துறை இயக்குநர் பா.பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் சார்பில்

# ரூ.561.26 கோடி மதிப்பில் 14 திட்டப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

**சென்னை, மே 14-**

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் ரூ.561.26 கோடி செலவிலான 14 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, ரூ.201 கோடி மதிப்பீட்டிலான 9 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.5.2023) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் 561 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவிலான 14 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 201 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 9 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

சென்னைப் பெருநகரப் பகுதிகளில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று அமைப்புகளை நகரின் வளர்ச்சிக்கேற்ப தேவைகளின் அடிப்படையில் திட்டமிட்டு, அபிவிருத்தி செய்து முறைப்படுத்தவும், குறிப்பாக மக்களின் சுகாதாரத்தை பாதுகாக்கவும் மற்றும் அதனைச் சார்ந்த அனைத்துத் தேவைகளுக்காகவும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் உருவாக்கப்பட்டது. சென்னைப் பெருநகர மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுகளை பாதுகாப்பாக அகற்றுதல், நீர் ஆதாரங்களை பெருக்குதல், குடிநீர் கட்டமைப்பை வலுப்படுத்துதல், நகர்ப்புர நீர்நிலைகளை புனரமைத்தல் மற்றும் மீட்டெடுத்தல் போன்ற பணிகளை சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் ஆற்றி வருகிறது.

### முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தல்!

கொடுங்கையூரில் 170 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில், நாளொன்றுக்கு 120 மில்லியன் லிட்டர் கொள்ளளவு திறன் கொண்ட தொடர் தொகுதி உலை முறையில் இரண்டாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டம்;

அம்பத்தூர் மண்டலம், வார்டு89 மற்றும் வார்டு92ல் முகப்பேர் சாலையில் பாதாள சாக்கடை திட்டம் இல்லாததால் புதிய பாதாள சாக்கடை திட்டம் அமைத்திடும் வகையில் 2 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் கழிவுநீர் குழாய் விரிவாக்கம் செய்யும் பணி;

அம்பத்தூர் மண்டலம், வார்டு93ல் பாடிக்குப்பம் கால்வாயில் கழிவுநீர் கலப்பதைத் தடுப்பதற்காக 1 கோடியே 77 இலட்சம் ரூபாய் செலவில் கழிவுநீர் உந்துநிலையம் அமைத்தல் மற்றும் கழிவுநீர் உந்துகுழாய் அமைக்கும் பணி;

நெசப்பாக்கத்தில் 74 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில், நாளொன்றுக்கு 50 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட தொடர் தொகுதி முறை புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டம்;

சென்னை நதிகள் சீரமைப்பு திட்டத்தின் கீழ், எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் அடையாறு ஆற்றில் நேரடியாக கழிவுநீர் கலப்பதைத் தடுப்பதற்காக 2 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில், கோடம்பாக்கம் மண்டலம், எம்.ஜி.ஆர். நகர் கால்வாய் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சீரமைப்பு பணிகள்;

### வளசரவாக்கம் மண்டலம்

வளசரவாக்கம் மண்டலம், நெற்குன்றம் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ், 51 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில், வள்ளியம்மை நகர் மற்றும் என்.டி.பட்டேல் ரோடு ஆகிய பகுதிகளுக்கான கழிவுநீர் குழாய்கள், கழிவுநீர் விசைக்குழாய்கள் மற்றும் கழிவு நீரிறைக்கும் நிலையம் அமைக்கும் திட்டம்;

வளசரவாக்கம் மண்டலம், வார்டு 149 இராமகிருஷ்ணா நகர் பகுதியில் 41 கோடியே 97 இலட்சம் செலவில் 24 மணிநேரமும் சீரான குடிநீர் விநியோகிக்கும் திட்டம்;

வளசரவாக்கம் மண்டலம், போரூர், வார்டு எண்.151 மற்றும் 153க்குட்பட்ட பகுதி மக்களின் பயன்பாட்டிற்காக 38 கோடியே 29 இலட்சம் ரூபாய் செலவில் விரிவான பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்;

வளசரவாக்கம் மண்டலம், இராமாபுரம் தமிழ் நகர் மற்றும் ஆலங்குளம் பகுதிகளுக்கு 32 கோடியே 29 இலட்சம் ரூபாய் செலவில் விரிவான பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்;

### ஆலந்தூர் மண்டலம்

ஆலந்தூர் மண்டலம், வார்டு157ல் மணப்பாக்கம் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில் 19 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் விரிவான குடிநீர் வழங்கும் திட்டம்;

ஆலந்தூர் மண்டலம், வார்டு157ல் மணப்பாக்கம் ரிவர்வியு காலனி பகுதியில் 22 கோடியே 40 இலட்சம் ரூபாய்

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்

## பெங்களூரு விமானங்கள் சென்னையில் தரையிறங்கின! பயணிகள் அவதி!

பெங்களூரு, மே 14 -

சென்னை கர்நாடக மாநிலம் பெங்களூருவில் நேற்று முன்தினம் இரவு முதல் மோசமான வானிலை நிலவியது. இதனால் பெங்களூரு விமான நிலையத்தில் தரையிறங்க வேண்டிய கொல்கத்தா, டெல்லி, சென்னை, புவனேஸ்வர், மும்பை, சூரத், கோலாலம்பூர், ஹாங்காங் உள்பட 14 விமானங்கள் தரையிறங்க முடியாமல் தவித்தன.

இதன் காரணமாக சென்னை விமான நிலையத்துக்கு அடுத்தடுத்து 14 விமானங்களும் வந்து அவசரமாக தரையிறங்கின. இந்த விமானங்களில் வந்த பயணிகள் விமானங்களை விட்டு கீழே இறக்காமல் விமானங்களிலேயே அமர வைக்கப்பட்டனர். விடிய விடிய பயணிகள் விமானத்திலேயே அமர வைக்கப்பட்டதால் பயணிகள் பெரும் அவதியடைந்தனர்.

ஏற்கனவே நள்ளிரவில் இருந்து அதிகாலை வரை சென்னை விமான நிலையத்தில் வெளிநாட்டு விமானங்கள் பெருமளவு வந்து தரை இறங்கி கொண்டிருந்த நேரத்தில் பெங்களூருவில் தரையிறங்க வேண்டிய 14 விமானங்கள் சென்னையில் வந்து தரை இறங்கியது.

இதனால் சென்னை விமான நிலைய கட்டுப்பாட்டு அறை அதிகாரிகள் தரை தள பணியில் உள்ள லோடர்கள் சமாளிக்க முடியாமல் பெரும் சிரமத்திற்கு உள்ளானார்கள். இதையடுத்து கூடுதலாக கட்டுப்பாட்டு அறைக்கு அதிகாரிகளும், தரை தள ஓடுபாதை பகுதிக்கு கூடுதல் லோடர் ஊழியர்களும் அவசரமாக வரவழைக்கப்பட்டு சமாளித்தனர். பெங்களூருவில் வானிலை சீரடைந்த பின் விமானங்கள் அனைத்தும் ஒன்றன் பின் ஒன்றாக தாமதமாக புறப்பட்டு சென்றன.

## ராகுல்காந்திக்குத் தண்டனை வழங்கிய

# நீதிபதியின் பதவி உயர்வு நிறுத்தி வைப்பு!

### பதவி உயர்வு பெற்ற 68 நீதிபதிகளும், முன்பு வகித்த பதவிகளுக்கே திரும்ப உத்தரவு!

புதுடெல்லி, மே 14-

அவதூறு வழக்கில் ராகுல் காந்திக்கு தண்டனை வழங்கிய நீதிபதி உள்ளிட்ட 68 நீதிபதிகளின் பதவி உயர்வை நிறுத்தி வைத்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பதவி உயர்வு பெற்ற 68 நீதிபதிகளும், முன்பு வகித்த பதவிகளுக்கே திரும்ப வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் பிரச்சாரத்தின்போது, பிரதமர் மோடி குறித்து அவதூறு கருத்துக்களை பேசியதாக தொடரப்பட்ட வழக்கில் ராகுல்காந்திக்கு சூரத் நீதிமன்றம் தண்டனை அளித்து தீர்ப்பளித்தது.

இந்நிலையில், ராகுல் காந்திக்கு தண்டனை வழங்கிய நீதிபதி ஹரிஷ் வர்மாவுக்கு கடந்த 18 ஆம் தேதி கூடுதல் மாவட்ட நீதிபதியாக பதவி உயர்வு வழங்கப்பட்டது. இவருடன் மேலும் 67 பேருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது. இதனை எதிர்த்து சட்டத்துறை அதிகாரிகள் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

அந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நீதிபதி எம்.ஆர்.ஷா, சி.டி.ரவிகுமார் அமர்வில் கடந்த 8 ஆம் தேதி விசாரணைக்கு வந்தது. அப்போது, உரிய சீனியாரிட்டி விதிமுறைகள் பின்பற்றப்படாமல் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு தடை விதிக்காவிட்டால் நாடு முழுவதும் உள்ள நீதிமன்றங்களில் இந்த நடைமுறை பின்பற்றப்படும் ஆபத்து உள்ளது என்று மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர்கள் வாதிட்டனர்.

இதையடுத்து, அனைத்துத் தரப்பு வாதங்களும் முடிவடைந்ததைத் தொடர்ந்து தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டது. இந்நிலையில், ராகுல் காந்திக்கு தண்டனை வழங்கிய நீதிபதி உள்ளிட்ட 68 நீதிபதிகளின் பதவி உயர்வை உச்சநீதிமன்றம் நிறுத்தி வைத்து உத்தரவிட்டுள்ளது.

குஜராத் உயர்நீதிமன்றத்தின் பதவி உயர்வு பரிந்துரைக்கு எதிரான வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த போதே பதவி உயர்வுக்கான அரசாணையை குஜராத் மாநில அரசு பிறப்பித்துள்ளது. எனவே, உயர்நீதிமன்ற பரிந்துரைக்கும், பணி உயர்வு உத்தரவுக்கும் தடை விதிப்பதாக தீர்ப்பில் நீதிபதி எம்.ஆர்.ஷா அமர்வு கூறியுள்ளது. பதவி உயர்வு பெற்ற 68 நீதிபதிகளும், முன்பு வகித்த பதவிகளுக்கே திரும்ப வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# தி.மு.க. உயர்நிலை செயல் திட்டக் குழுக் கூட்டம்!

### பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தி.மு.க. உயர்நிலை செயல் திட்டக் குழுக் கூட்டம் வருகிற 20.5.2023 சனிக்கிழமை காலை 10.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெறும். அதுபோது உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 12-5-2023

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்
தி.மு.க.